உ

விநாயகன்றுணை.

நாமகளிரட்டைமணிமாலை.

மதுரை

திருஞானசம்பந்தமாலை.

இவை

மதுரை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ

மாணிக்கவாசகசுவாமிகள்

விரும்பியவண்ணம்

சொட்டாம்பட்டி

ம. கருப்பையப்பாவலரவர்கள்

இயற்றியன.

சென்னை:

ஜி. புஷ்பரதசெட்டி அண்டு கம்பெனியாரது

கலாரத்நாகரம்

என்னும்

அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பட்டன.

1897.

உ

முருகன் துணை,

சாத்துகவிகள்.

சென்னைப்புரசை அட்டாவதானம் சபாபதிமுதலியார்
அவர்கள் மாணாக்கர் திருமயிலை வித்துவான்
சண்முகம்பிள்ளை அவர்களியற்றியன.

வெண்பா.

எணிமாலை நீத்திடவிங் கென்றே யிரட்டை
மணிமாலை சாத்தி மகிழ்ந்தான்—துணிவாற்
கலைமாது தாட்கே கருப்பையவே ளெங்கள்
மலைமாது மைந்தனன்பன் வாய்ந்து.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

தென்னவனாட் டினுக்கணியாங் கூடல்வளர் கவுணியனார்
திறத்தை யோர்ந்திட்
டின்னயச்செந் தமிழலங்கல் சாத்துகெனப் பலகாலு
மினிது கேட்பப்
பொன்னனைய குணத்துமா ணிக்கவா சகமுனிவன்
புனைந்திட் டானால்
என்னொருநன் பன்கொட்டாம் பட்டிவரு கருப்பையா
வியல்வல் லோனே.

மேற்குறித்த முதலியார் அவர்கள் மாணாக்கரும்
சென்னை கவரண்மெண்டு தமிழ் டிரான்ஸ்லேட்டரும்
முனிஷியாருமாகிய

தண்டலம். பாலசுந்தரமுதலியார் அவர்கள்

இயற்றியன.

வெண்பா.

மன்னு மிரட்டை மணிமாலை செந்தமிழாற்
பன்னுங் கருப்பையாப் பாவலவன்—றன்னு
விருந்தாளே நாமகளென் றேற்றுக்கொள் வாளேல்
திருந்ததின்மாண் பென்சொலவ தே.

கட்டளை கலித்துறை.

மாணிக்க வாசகத் தேவன் சொலேற்றொரு மாலையினை
ஆணிக் கனகமு நாணுறச் செந்தமி ழாலணிந்தான்
தோணிக் கழுமல ஞானசம்பந்த சுவாமி மெய்ச்சீர்
பாணிக்க வோக்கு மன்றோர் கருப்பையப் பாவலனே.

சென்னை கவரன்மெண்டு கண்ட்ரோலர்ஸ் ஆபீஸ்
புக்டிபார்ட்மெண்டு பென்ஷன் சூப்பர்வைசர்

திருமயிலை

செந்தில்வேலு முதலியார் அவர்கள்

இயற்றியன.

வெண்பா.

நாமகளின் மேலிரட்டை நல்ல மணிமாலை
சோமனினன் கோத்ததெனச் சூட்டினன்—பூமன்
விருப்புற்றுக் காணும் வியன்கொட்டாம் பட்டிக்
கருப்பையாப் பாவலவன் காண்.

மதுரைத் திருஞான சம்பந்த வள்ளற்
கதிமதுரச் சொற்பூ வமைந்த—துதிமாலை
மேவமணி வாசகக்கோன் வேண்டக் கருப்பையா
பாவலவன் சாத்தினன்பொற் பாய்.

சிதம்பரம் ஈசானியமடம்
ஸ்ரீமத் - இராமலிங்கசுவாமிகளவர்கள்
மாணாக்கர்
க. வ. திருவேங்கடநாயுடுஅவர்கள்
இயற்றியது.

நேரிசையாசிரியப்பா.

மறைநான் கொருங்குஞ் சிரநான்கி னோது
முட்டாட் டாமரை முகப்பினி னமர்ந்த
வேதன் திருமுக மேவிய சிதங்கொள்
பூத்தனிற் பொலியுஞ் சீர்த்தனிச் செல்வி
செவ்விய வடிவிற் திவ்விய யாழும்
புத்தகம் படிக வித்தக வடமும்
திவவி யாழ்வயிற் சென்று தடாவுறாஉந்
திருக்கையு மான திருத்தோ ளிணைக்கிற்
ருமூற விரட்டைச் சவிகொண்மா மணிமய
யணிபெறக் கோத்திட் டணிந்தன னதாஅன்று
சிரபுரம் வந்து சிரபுறத் தான
துவாத சாந்தத் தனிப்புர மமர்ந்த
மலைமக ளுண்ணு முலையமு தருந்துறாஉ
ஞானசம் பந்த தேசிக ராயுந்

கா[illegible] மாலை யீனம்பி லிஃதென்
றல[illegible] நாரி னெல்லிடைப் புனைந்தனன்
[illegible]னிவா சகரெனு முனிமுதல் பணிப்பான்
ஞானசம் பந்த மாலையாந் தொடையலைப்
பல்வளம் பொ[illegible]ளிய வி[illegible]லமர் மாடக்
கொட்டாம் பட்டிக் கோ[illegible]கர்த்[illegible]மென
வருத்தியொடு கவிபுக லாற்றல்
கருப்பையா வென்னுங் கவிவல் லோனே.

ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் சந்நிதி வி[illegible]வான்
அட்டாவதாநம்
பெரியதிருவடி கவிராசரவர்கள்
இயற்றியன.

வெண்பா.

சொற்சுகம்பொ ருட்சுகமுந் தோயக் கருப்பையவேள்
அற்புடனே கன்னி யறைந்தனனால்—பொற்பே
திரட்டை ம[illegible]மாலை சேர்நா மகட்கே
இரட்டைமணி மாலை யிசைந்து.

கற்கண்டு சீனி கசக்கக் கருப்பையவேள்
சொற்கண்[illegible]டெடுத்துத் தொடுத்தான்பா—ரிற்கண்டோர்
தம்பந்த மாலை தணிந்திரிய மெய்ஞ்ஞான
சம்பந்த மாலை தனை.

உ

கடவுள்துணை.

நாமகளிரட்டைமணிமாலை.

காப்பு.

வெண்பா.

மணிமாலை புத்தகங்கொள் வாணிக் கிரட்டை
மணிமாலை சூட்ட வருமே—துணையாய்த்
திக்கைமா தங்கமூர்து தோன்றலெனப்பெற்ற
திதிக்கைமா தங்கமுவர்து.

நூல்.

வெண்பா.

பூக்கிளரும் வெண்டா மரைபோலும் போதமிலேன்
வாக்கிலுறை மெய்ஞ்ஞான வாணியே - ஆக்கல்
புரிவேத னின்னையன்றிப் போதமறை யீட்டும்
பரிவேதன் பாகக்கண் பார். (௧)

கட்டளைக்கலித்துறை.

பாராதி யண்டமெ லாஞ்சுற்றிக் கங்கை பலபடிந்தும்
சீராதி தேவர்க ளாலயம் புக்குத் திரிந்திடினும்
வாரா தினிய தமிழ்ப்பாடும் வல்லமை வாணிநின்றாள்
ஆராதித் தன்பிற் றுதித்தேத்தி டார்க ளனைவர்க்குமே. (௨)

வெண்பா.

மேனாளிற் கம்பனையுன் மேன்மையரு ளாலன்றோ
வானாள் புலவரெலா மாழ்கிநிற்க - மானப்
புவிச்சக்ர வர்த்திமுற்றும் போற்றிசித்தம் வாணி
கவிச்சக்ர வர்த்தியென்றார் காண். (௩)

கட்டளைக்கலித்துறை.

காண்டற் கரியவெண் மேனிமெய்ஞ் ஞானக் கலைமகளே
வேண்டற் குரியபல் கல்வியுஞ் சீர்த்தியு மெய்த்திருவும்
ஈண்டற்பு மேன்மையு மீந்தருள் வாயிது வேதருணம்
தூண்டப் படாச் சுடர்விளக் கேமறை சொல்கிளியே. (௪)

வெண்பா.

சொற்கும் பொருட்கு முயிராய்த் தினந்தொறூஉங்
கற்கும் பொருட்டென்ன கத[illegible]லங்கி - நிற்கு
மயிலேசங் கத்திருக்கு மாமணியே நின்வாய்
மயிலே சங்கத்திருக்க வை. (௫)

கட்டளைக்கலித்துறை.

ஐயகம் வையக முற்று முன் கைவச மாம்விழியின்
மையகங் காட்டி மலர்க்குழல் காட்டி மயலின்மயல்
செய்யக மாதர்க ளுமையை வீட்டுந் திறம்வருமால்
ஐயகண் ணோட்ட வருட்கலை வாணி யலர்ப்பதமே. (௬)

வெண்பா.

அலகிலா ஞான வருட்கடலே நின்னை
உலகிலார் விட்டுய்வ ரோங்கும் - பலகலைக்கும்
அன்னையே தெய்வ வமுதமே கற்பகமே
என்னையே வந்தாளின் றே. (௭)

கட்டளைக்கலித்துறை.

இன்றேன் கனிகண் டிவையா தியினு மினிப்புறவே
[illegible]ன்றேறு நாற்கவி யின்னமு தூற்றுநல் வாக்கருள்பொற்
குன்றே யனைய தனத்தா ளெழிலியுங் கொடியிடையே
நன்றே படைப்பிக்கு நான்முக னார்க்கொரு நாயகியே. (௮)

வெண்பா.

நாயனைப்[illegible]விருந்து நாற்கவியின் பாய்க்கழற
[illegible]ராயனையே வெண்பா மனையனமே - தூய
[illegible]லையே கலைமுடிவே கண்மணியே யென்றன்
[illegible]லையே கலையுறச்செய் தாள். (௯)

கட்டளைக்கலித்துறை.

[illegible]ளா யுனதடிக் கன்புவை யாதிங் கவ[illegible]நாள்
வாளாக் கழித்தவர்க் குண்டுகொல் லோ மதிகதியே
கேளா [illegible]மகிழ் கேகயமே வரங் கேட்பதுமோர்
[illegible]ளா யினுமுனை நீங்காதென் னெஞ்சத்து நாடுவதே. (௧௦)

வெண்பா.

நாடும் பொருளும் நலமனையு மற்றெவையும்
ஓடும் பொருளன்றி யுந்துணையாய்க் - கூடும்
பொருளன்று கண்மலர்நற் போதமருள் வாணி
பொருளன்றே நிற்கும் பொருள். (கக)

கட்டளைக்கலித்துறை.

பொருட்செல்வ நீயெனப் போற்றும னிற்கின்ற புல்லருக்குன்
அருட்செல்வ மேதுபல் லற்புத ஞான வமலியுயர்
தெருட்செல்வி யம்புயன் றேவிநின் னன்பினர் சிந்தையுற்ற
இருட்செல்ல நற்கலைத் தீபமொன் றேற்றிடு மின்னுயிரே. (கஉ)

வெண்பா.

இன்னுயிரே கண்மணியே யேற்றவலர் மேலுறையு
மன்னுயிரே முத்தர் மதிமதியே - பன்னும்
பவவா தனையறநின் பாலேத்தும் வாக்கு
தவவா தனையனெற்குத் தான். (கங)

கட்டளைக்கலித்துறை.

தானந் தவத்தைச் செயாதவ ரேனுநின் றாட்டுணையால்
ஊனந் தவத்தைப் பிணிபடியாம லுயர்ந்து நிற்கும்
ஆனந்த வத்தை யடைந்துய்வர் சொற்களத் தான்மதுரப்
பானந்த வத்தை யுறச்செயு நல்லெழிற் பாரதியே. (கச)

வெண்பா.

பாரதி கந்தமலர் வல்[illegible]னுவலுக்குச்
சீரதி கந்தருநற் றெய்வமாய் - பாரகத்திற்
கண்டுவந்து போற்றுவரேற் காணற்கரும் பொருளும்
கொண்டுவந்து வந்துகொடுக் கும். (கரு)

கட்டளைக்கலித்துறை.

கொடுக்கின்ற கற்பகச் சிந்தாமணியுமுன் கூற்றன் வரில்
தடுக்கின்ற கட்டாரி யுஞ்சன னப்பிணி தன்னைமுற்றுங்
கெடுக்கின்ற நன்மருந் துங்கண்டு கொண்டனன் கிட்டவந்தே
அடுக்கின்ற பேரைக் கவிக்கர சாக்குவ ளன்புபெற்றே. (௧௬)

வெண்பா.

அன்புடையார் கல்விக் கரசடைய ராயென்று
நின்புடையார் நன்னிலையி னிற்பரால் - வன்புடையார்
கல்லாராய்க் கல்லாய்க் கலைமகளே யாவர்க்கும்
பொல்லாராய் வீழ்வர்மரம் போல். (௧௭)

கட்டளைக்கலித்துறை.

போதகங் கொண்டமெய்ப் போதக ஞானம் புரியமுத
மாதகங் கொண்டு மதியார் மதியின் மருவற்கொல்லாப்
பாத கமலமு னிற்பா தகமலம் பாறுமெனாஞ்
சாதக மாமது சாதகர் கண்கண்டு சாற்றியதே. (௧௮)

வெண்பா.

தேன்கனியே யென்னத் தெவிட்டாக் கவியமுதந்
தான்கனியச் சொல்லவரு டந்தகலை - மான்கனியே
நான்குதலை யார்க்கினிய நாயகியே நின்மதலை
நான்குதலை யாள்வாயி னாள். (௧௯)

கட்டளைக்கலித்துறை.

நாடித் தலத்தினி லுன்செயுங் கன்மங்க ளன்மையிற்கை
கூடித் தலைமைப் புகழ்பெறச் செய்தருள் கோகிலமே
நீடித்த ஞான நிலைப்பொரு ளேகலை நேயர்சுவி
சேடித்த நற்புகழ் வெண்டா மரைப்பூத் திகழ்மணியே. (௨௰)

இரட்டைமணிமாலை
முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை.

மதுரை

திருஞானசம்பந்தமாலை.

காப்பு.

வெண்பா.

ஞானசம் பந்தத்தை நாம்பெறவே தென்மதுரை
ஞானசம் பந்தற்கு நன்மாலை—தானணிய
வைக்குஞ் சரவணற்கு வாய்த்தமுன்னோ னோர்கோட்டுக்
கைக்குஞ் சரவணற்பொற் கால்.

நூல்.

திருத்தகு வேதச் சிரப்பொரு ளனைந்துஞ் செக்கையைக் துடையவ னுணர்த்தக், கருத்தினி னுணர்ந்தான் கலம்பக முதலாக் கலைத்தமிழ்ப் பிரபந்த மோத, அருத்தியி லாதே னின்மனைப் பழிச்சா தலமரு கின்றனன் பவஞ்ச, வருந்தம தொழிய மாற்றுதி மதுரை மருவுசம் பந்தமா மணியே. (க)

பெருமணி யெல்லா மானமா மணியென் பிறப்பினோ டிறப்பினைக் கீண்ட, குருமணி யெங்கள் குடிமுழுதாண்ட கோமணி நெல்லையி னோர்வேய், தருமணி மகிழுங் கண்மணி யெழிற்சிந்தாமணி புகலியர்க் கரசா, வருமணி மதுரை வளநக ரென்று மருவுசம் பந்தமா மணியே. (உ)

தரு நீக்கை தனிற்கொடுங் கன்ம நிகளமோ யினுமுடை யாவிப், பாதகப் பிறவி யுள்வழி வினையும் பாறிடா தினிவ்ருக் கன்ம, மேக வெய்து மாசலி னின்னை மேவிடற் கிதுவிர கென் னுய், வாரினிற் சமண்மா சறுத்ததென் மதுரை மருவுசம் பந்த மா மணியே. (௩)

கேட்டல்சிந் தித்த றெளிதலென் றின்ன கிடைத்தபி னன்றி யே கிட்டை, நாட்டமீண் டொருவற் கெய்திடா தெந்தாய் நவி லுமச் சாதன மெய்தேன், கேட்டிலே கிடந்திட் டலமரு கின் றேன் கிளத்துநின் பூக்கழற் கன்பர், மாட்டிலா யினும்பத் திமையளி மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௪)

ஆக்கமீண் டெந்தாய் வேண்டுவ தடிஞா னந்தனை யன்றியின் றதனுன், நீக்கமி னின்றன் றிருவடி ஞாந நேரினென் றனைக்கொ டும் பாச, வீக்கமே புரியும் வீடுபே றெய்து விக்குமிவ் வியனி லத் துன்றன், மாக்கரு ணைக்கென் செய்வல்யான் மதுரை மரு வுசம் பந்தமா மணியே. (௫)

தத்துவ மாறு நகன்றதற் கப்பாற் றனிப்பரம் பொருளென நிலவும், சித்துநீ நின்றன் காட்சியைக் கண்டார் தெறும்பிறப் பொழிந்துவின் றிடுவார், அத்துவா மூர்த்த மாயடி யவருக் கரு ள்செயு மருணிலை யேமெய், வைத்தகௌ ணியர்தங் குலமணி மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௬)

சுட்டகன் றோங்கும் பொருளென வெல்லாச் சுருதிகள் முறையிட வன்று, சுட்டிநீ தோணி புரத்தினின் றந்தை துக ளறப் பரிந்துகாட் டியவா, சட்டநன் குமெம் பெருமநின் சர ணே சரணெனப் பற்றினே னென்றன், மட்டிலு யினுமந் நெ றியருண் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௭)

வாழ்கவந் தணரென் றேதிய தெய்வ வாய்மொழிப் பயனை யெய் குன்றை, வாழ்குரு மணியு முரைத்திடக் கண்டு மற்றதன் பொருணணி யுணராத், தாழ்வினை ளர்தோ வினிவரும் பிறவி தன்னினின் றெண்டரைச் சேர்ந்து, வாழ்பவர் [illegible]றெய் துவ ன்கொலோ மதுரை மருவுசம் பந்தமா மணியே. (அ)

ஓங்கிய லளத்தவ் வனையின்முப் புள்ளி யுந்திரி வெய்து மென்பால், ஆங்கரு ளையினிவ் வுருப்புனைந் தெய்து மருணிலை யுணர்[illegible] தொழிந்தேன், தேங்கிய வழு[illegible] பெருக்கமே வேதச் சிரமெனத் திகழ்தரு கனியே, வார்[illegible] வினையோர் மேவுறு மதுரை மருவுசம் பந்தமா மணியே. (கூ)

ஒருரு வென்றிக் கோதிய வகவ லுண்மையை நோக்குறுந் தோறும், யாருமும் மலவா தனையகன் றுய்யு மொருபுனை யென்பதின் றுணர்ந்தேன், தேருட்சிலம்பி மடத்தனல் கொளுவத் தெளிந்துபஞ் சவன்றனை யெய்த, வாரமா யவனைக் காத்தருண் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (க0)

நின்றனை நின்ற னருளலா னினைய லன்மையை நெடுமறை யினைத்து, நன்றுரை செய்யா னின்றுநின் றிறைஞ்ச னம்பநின் செயலலா தெவனோ, கன்றினன் விளவை யெறிந்தவற் கென்றுங் கட்புலங் கதுவரும் வெள்ளி, மன்றநில் றோங்கு வளர்தரு மதுரை மருவுசம் பந்தமா மணியே. (கக)

தென்புக வியர்தம் மிறையெனச் செறிந்து தில்லைவா ழந்தணர் தமையன், றன்புறுப் பாணர்க் கரன்கண மாக வறிவுறுத் தனையழி தகையேற், கின்பொடு முனையின் றுணர்த்திநின் னெழிற்று ளிணைமலர் முடிமிசை வயக்கி, வன்பவ மகழ்க்க வேண்டுவன் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (கஉ)

விண்வழி செறுமன் கணன்றனைக் கன்று விரகினே மொழிப் பய ...து, மனைவி வதுவை யெனும்பெய ரொன்றிட் டனந்த சீவருக்கெல்லா நல்லூர், தனிலிரண் டற்ற வீடுபே றுதவுந் தண் ணளி சுரந்தனையேற்குன. வினைகழ லொன்றே வழங்கெறின் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (கங)

ஆணவ மாதி மும்மல பந்த மரியவீ டெய்துதற் கிலையால், காணமொ டச்ச மடம்பயிர்ப் பென்னு நான்குரின் னலங்கவர் இற்பார், பூணவ விரப் மெய்துதற் கிலகிற ... நிலனேனும், மாணமேற் குன்ற னேக்கருண் மதுரை மருவு சம் பந்தமா மணியே. (கச)

இருவினை யொப்பிங் குறமல பாக மேயநல் லருட்பதி வெய்தக், காவரு மறையெய் துவையென வீண்டிக் கடையனேற் கருளவந்திலையே, பெருவினை மாசு கழுவகி லா்வெம் பேயம ணிகர்க்கொரு வருஞ்சீர், வரவுறுங் கைத வனுத்தொழு மதுரை மருவுசம் பந்தமா மணியே. (கரு)

மெய்யுயி ரென்ன வெள்ளினை யென்ன வியன்கனி யிரதமே யென்ன, மையிரு ளிகந்து பிரிவரும் வீடு வழங்கவென் றுன்னடி யிரந்தேன், செய்யசெ மெல்லா மூத்தமர் பொழிலிற் செறிமுகில் கல... வைகக் குமையோ டரனிகர் மதுரை மரு வுசம் பந்தமா மணியே. (கசா)

திருநெறித் தமிழென் றேறிடு மந்தத் திப்பிய மொழியினைக் கொடிய, கருநெறி வயப்பட் டிழிதருங் கடையேன் கவறெற வுணர்த்துவான் புகலி, தருநெறி யமையு மந்தணர் மரபிற் றர ணியோர் களியுற வெந்தாய், வருநெறி யுணரே னுலவாய் மது ரை மருவுசம் பந்தமா மணியே. (கஎ)

கயல்பொரு விழிகார் குழல்செயன் மேனி கண்ணிணைப் புயங்
கிரும் பனசொன், மயினிகர் சாய னடையொரு மாது மறுகினிற்
பவனிவந் திடக்கண், டியல்வகை யுணரா துயங்குகின் றன[...]
இலையல தொருதுணை காணேன், மயறெற [...]ருளேக் குதவு[...]
மதுரை மருவுசம் பந்தமா மணியே. (க௮)

தரணியி னரவின் வி[...]மொருங் ககலுந் தன்மைதா னுவ[...]
தக்கோய், கருடபா [...]னையி னெழிதரு மென்பர் கடவுணிற் கை
[...]யெனநக, கருமவல் வினைக ளொறுத்துன தடிக்கீழ்க்
கடையனே னெய்திடக் கிடைக்கண், வருமரு ளெனக்க முதவு
தென் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (க௯)

என்மனத் தொருநற் கார்தரு வத்தி னிச்சிறு நுதலியைச்
சேரி, னுண்மையி னுய்யு மல்லதே னுய்யா ளென்பது மொருங்
குணர் கிற்பாய், வெண்மணிப் பந்தர் சிவிகைநற் சின்னம் வெள்
விடை யிறைதரப் பெற்றே, வன்மையி னோங்கு மெழில்குலா
மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௨௦)

உமைதரு முலைப்பா லயின்றஞான் றெம்மோ யொருசிறு
திவலையா னுமினெற், கமையும்வெம் பவங்க ளொருங்கெனை
யகலு மையவீண் டுறும்பரி சிலனே, கமைபெறு மன்பர் கருத்
தினி லினிக்குங் கதலியே காழியந் தணர்தம், வமிசமே யோங்க
வருமெழின் மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௨௧)

அரஞ்சுடு மயில்வே லெனக்கனன் றென்னை யுணங்கலைங்
கணைநனி யுடற்றி, உரஞ்சுட வீண்டு மெலிதரக்கண்[...]ந்தும்
மருவவந் திலையே, புரஞ்சுடு மொருவ புண்ணியக் கடலிற் பொ
லிந்தவற் புதப்புலா ஞறும், மரஞ்சுடு கணையான் றனக்கருண்
மதுரை மருவுசம் பந்தமா மணியே. (௨௨)

...ற்றினி னரவுந் தன்பண மடங்கு மென்பது கிகழ்த்திடு மூல
...ந், காற்றருந் சீர்த்தி யிறைவனின் னடிக்கே யவலகெஞ் சக
...னைத் தடங்கும், பேற்றினை யெய்தா திருப்பது கலனோ பெ
ருகுநீர் வையைதன் னூற்றன், மாற்றமண் முடிமேற் சுமந்திடு
மதுரை மருவுசம் பந்தமா மணியே. (உங)

அனுதியாம் பாச மொழிதர வென்று மனுதியா மாருயிர்
வருக்க, மனுதியாங் குமர நாயக னின்சே வடிநிழ ...ங்குழல்
மையினை, எனுதியா னிகந்தோர்க் கிரும்பரங் குன்றி னியம்பினை
யெந்தைநீ யந்த, மனுதிகட் டெட்ட ...லையருள் மதுரை மருவு
சம் பந்தமா மணியே. (உச)

சித்தெனுந் தருமத் திருவருளின்றுச் செறியினு மின்னுவநீ
...ட்டுஞ், சித்தியான் காணுஞ் சித்தெனப் படுத றெரிந்தன னின்
...ட் பொலிவான், அத்தனைப் பாடி யன்றுபொற் றுள மன
...மைனெய்தியங் கருணை, வைத்தெனை யாளும் புரிசைசூழ்
...மருவுசம் பந்தமா மணியே. (உரு)

...னிடங் கொண்ட குழலியாள் இரங்கிக் காலமிக் குலனிற்
...த்திட், டுனிடங் கொண்ட ... கொண் டந்தோ வுதிதர
...ற் கிரங்குகின் றிலையால், மானிடங் கொண்டா ... ருயிர் வருக்
...ம்மரி னூழ்ந்தமை கண்டு, மானிடங் கொண்டின் றெய்திடு
...ரை மருவுசம் பந்தமா மணியே. (உஎ)

கஞ்சனைத் தியதென் காஞ்சியின் மாயோன் கடவுளின் னுருப்
...னா னதிபரன், தஞ்சமென் றிரந்துன் செந்தமி ழோதுந் தன்
...யை யென்றுநான் மறக்கேன், அஞ்சொலார் குழற் ... நாணி
...ப்ப வன்றுபஞ் சவன்கையிற் றனையுண், மஞ்சி வரிஞ்சி ...
... ரை மருவுசம் பந்தமா மணியே. (உஎ)

11549

அறிவினோ டிச்சை செயலெனக் கிளத்து மணிகிளர் ச மூன் றுளையான், நெறிமையின் மலசத் திகள்பல வுளை நீர்மையிற் புரப்பதுன் கடனே, சுறவினற் கோட்டிற் றேவ்றி மூந்நீர்த் தொடுகடற் கிறைவலி பாற்ற, மறிபுனற் சடையின் முகில்விடு மதுரை மருவுசம் பந்தமா மணியே. (உஅ)

பதிபசு பாசப் பான்மையஞ் செழுத்திற் பரிவினிற் படிற னேற் குணர்த்திக், கதுமென நின்பொற் கமலச்சீ றடியென் கரிசறச் சூட்டுவ தென்றே, விதுவை நேர்வதன மாதரைம் பாலின் விளங்குறாஉங் குயின்மிடை பொழிலின், மதுவைவேட் டளிபாண் முழக்குறு மதுரை மருவுசம் பந்தமா மணியே. (

நெஞ்சில்வஞ் சகமே செறிந்திடுஞ் சமணர் நீலகந் தரற்கி பெண்ணை, விஞ்சிய வாறு யினவென விளம்ப வியன்றமி புரந் தனையால், கிஞ்சுக வாயார் மிடற்றிசை மிதுனக் கிெ மென்னவைம் பாலோர், மஞ்செென நிலவு மாடமார் மருவுசம் பந்தமா மணியே.

வாழ்த்துவெண்பா.

மால்வாழ்கப் பூவான் மறைவாழ்க நால்வரருள்
நூல்வாழ்க மிக்கசன் னோன்புதவர் - பால்வாழ்க
வாழ்க வயனு மகள்வேள் சிவனடியார்
வாழ்க தமிழ்ப்பா வலர்.

திருஞானசம்பந்தமாலை

முற்றுப்பெற்றது.